# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்

## 27.05.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அந்நூரின் 54 முதல் 57 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

*அதன் பொருள்: நீர் அவர்களுக்குக் கட்டளையிட்டால், உடனே அவர்கள (வீடுகளிலிருந்து) புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதிவாய்ந்த சத்தியங்கள் செய்கின்றனர். நீர் கூறுவீராக! சத்தியங்கள் செய்யாதீர்கள். பொதுவாகக் கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்து கொள்பவனாவான்.*

*அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக. எனவே நீங்கள் புறக்கணித்து விட்டால் அத்தூதரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு அவர் பொறுப்பாளராவார். உங்களிடம் ஒப்படைக்கப் -பட்டதற்கு நீங்கள் பொறுப்பாளராவீர்கள். நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் நேர்வழியினைப் பெறுவீர்கள். மேலும் இத்தூதரின் பொறுப்பு தூதுச் செய்தியினைத் தெளிவாக எடுத்துரைப்பது மட்டுமேயாகும்.*

*அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களின் அச்சத்திற்குப் பின்னர் அதற்குப் பதிலாக அமைதியை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவர்.*

*நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். மேலும் ஸக்காத் கொடுங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். அப்போதுதான் உங்கள் மீது கருணை காட்டப்படும். **(24:54-57)***

நான் ஓதிய இந்த வசனங்களின் பொருளை தற்போது நீங்கள் செவியேற்றீர்கள். இந்த வசனங்களில் ஒன்று, ஆயத்தே இஸ்திக்லாஃப் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, இந்த வசனத்தில் இறைவன் மூஃமின்களிடம் கிலாஃபத்திற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பல்வேறு நூல்களில் இந்த வசனத்திற்கான விளக்கத்தை எழுதியுள்ளார்கள். இதற்கு விளக்கமளித்தவாறு இவ்வசனத்தை பல கோணங்களில் பல்வேறு முறைகளில் இதை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாம் எழுதிய சிறிய நூலாகிய அல் வஸிய்யத் என்னும் நூலில் இது தொடர்பாக தமக்குப் பின்னர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு உருவாகும் என்ற நற்செய்தியையும் வழங்கியுள்ளார்கள். இந்த நூலை அவர்கள் டிசம்பர் மாதம் 1905 ஆம் ஆண்டு எழுதினார்கள்.

இந்நூலில் இறையச்சம், ஏகத்துவம், தம்முடைய பதவி, கிலாஃபத் மற்றும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்காகவும், ஜமாஅத்தை உறுதியான அடித்தளத்தில் நிலைத்திருக்கச் செய்யவும், பொருள் தியாகத்தை தொடர்ந்து செய்து வருவதற்காகவும், வஸிய்யத் என்ற இறைத் திட்டத்தையும் வழங்கினார்கள். இது

உண்மையில் இறைவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகள் மற்றும் இறை படைப்பினங்களுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கான மிகச் சிறந்த அமைப்பாகும். இதற்கு எதிரில் உலகில் காணப்படுகின்ற பொருளாதார அமைப்பிற்கு எந்த மதிப்பும் இல்லை. ஏனென்றால் அவை இறையச்சம் இல்லாமலும் வெறும் ஒரு சில முக்கிய அம்சங்களைக் கொண்டதாகவும் ஒரு சில மக்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன.

எவ்வாறிருப்பினும், இதன் கிளைகளும் விளக்கங்களும் பல வகைப்படுகின்றன. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல் வஸிய்யத் என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன். வஸிய்யத் என்ற அமைப்பைக் குறித்து நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இது 1905 ஆம் ஆண்டு இந்நூல் எழுதப்பட்டதுடன் தொடங்கியதாகும். ஆனால் ஆயத்தே இஸ்திக்லாஃபைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்நூலில் கூறியுள்ள அஹ்மதிய்யா கிலாஃபத் என்பது இந்நூல் எழுதப்பட்டு மூன்று வருடங்கள் கழித்து இன்றிலிருந்து 103 ஆண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் இன்றைய தினம் அதாவது 27 மே 1908 ஆம் ஆண்டு தொடங்கியதாகும்.

இந்த கிலாஃபத் அமைப்பானது 1400 ஆண்டுகள் கழித்து இறைவன் மீண்டும் ஆரம்பித்த ஓர் அமைப்பாகும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூலிலிருந்து மேற்கோளை உங்கள் முன் எடுத்து வைப்பதற்கு முன்பாக இந்த வசனங்களுக்கு சுருக்கமான விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். இதனால் கிலாஃபத் அமைப்பு தொடர்பான திருக்குர்ஆனின் கட்டளைகளும் உங்கள் முன் இருக்க வேண்டும். இவ்வசனங்களில் இறைவன் மற்றும் அவனது தூதரை ஏற்றுக் கொள்பவர்கள் மற்றும் கலீஃபாக்களை ஏற்றுக் கொள்பவர்களுக்காகவும் ஒரு முழுமையான செயல்முறைத் திட்டங்களை இறைவன் நம்முன் எடுத்து வைத்துள்ளான்.

இதில் முதன்மையானதும் அடிப்படையானதுமான ஒன்றை இங்கு குறிப்பிட்டுள்ளான். அது கட்டுப்படுதலாகும்; கட்டுப்படுதல் என்றால் என்ன? இதன் உண்மையான தரம் யாது? என்பதை இங்கு கூறியுள்ளான். சந்தர்ப்பம் வரும் போது எதிரிகளுக்கு எதிராக எல்லா வகையிலும் போரிட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறி சத்தியம் மட்டும் செய்வது கட்டுப்படுவதின் உண்மையான தரமாகாது. வெறுமனே சத்தியம் செய்வது வேலைக்கு ஆகாது. ஒவ்வொரு விஷயத்திலும் முழுமையான கட்டுப்படுதலைக் காட்டாத வரை சத்தியம் செய்வது மட்டும் போதுமானதாகாது. முழுமையான கட்டுப்படுதலை வெளிப்படுத்தினால்தான் நாங்கள் எல்லா வகையிலும் தியாகம் செய்யவும் அர்ப்பணமாவதற்கும் ஆயத்தமாக உள்ளோம் என்று நீங்கள் கூறுவது உண்மையாகும். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் வழங்கிய கட்டளைகளைப் பேணி நடக்கவில்லை என்றால், பேணி நடக்க முயற்சி செய்யவில்லை என்றால் சில நேரம் பெரிய பெரிய வாதங்கள் கூட பொய்யாகி விடும்.

எனவே, இது சம்பந்தமான உண்மையான அம்சம் முழுமையான கட்டுப்படுதலை செயல்பூர்வமாக நிரூபிப்பதாகும். இந்த வகையான செயல்பூர்வமாக கட்டுப்படுதல் இல்லையெனில், வெளிப்பார்வைக்கு சின்னச் சின்ன கட்டளைகளாக தென்படுகின்றவற்றில் கூட செயல்பூர்வமான கட்டுப்படுதலைக் காட்டவில்லையாயின் வெறும் வாதங்கள் வீணானவையாகி விடும்.

இன்னல்லாஹ கபீரும் பிமா தஃமலூன் என்று கூறி மனிதனை ஏமாற்றி விடலாம். ஆனால் இறைவன் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாவான். மறைவான மற்றும் வெளிப்படையான செயல்கள் யாவும் அவன் முன்னால் இருக்கின்றன. எனவே அவனை ஏமாற்ற முடியாது என்று கூறுகின்றான்.

எனவே இறைவன் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை ஒரு உண்மையான மூஃமின் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். ஒரு மனிதனுக்கு இதன் மீது உறுதியான எண்ணம் ஏற்பட்டு விட்டால் இறைவன் எப்போதும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் உறுதியாக மனதில்

பதிந்து விட்டால் வெறும் சத்தியங்களாக மட்டும் இல்லாமல் பொதுவாக கட்டுப்படுவதும் வெளிப்படும். ஒவ்வொரு நல்ல தீர்மானங்களின் மீதும் உண்மையான மனப்பான்மையுடன் கட்டுப்பட்டு கீழ்படிந்து செயல்படலாம். அல்லாஹ் மற்றும் அவனது தூதருடைய கட்டளைகளை ஏற்று நடக்க மனிதன் எந்நேரமும் ஆயத்தமாக இருப்பான். இதற்கான முயற்சிகள் செய்து வருவான்.

அதீவுல்லாஹ வஅதீவுர் ரஸுல் என்று கூறியதுடன் வஉலில் அம்ரு மின்கும் என்றும் கூறியுள்ளான். இதனால் ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்பட்டு நடப்பதும், அமீருக்கு கட்டுப்பட்டு நடப்பதும் கலீஃபாவுக்கு கட்டுப்பட்டு நடப்பதும் கட்டாயமாகி விடுகிறது.

பிறகு முழுமையாகக் கட்டுப்படாமல் தமது சுய விருப்பத்தின்படி செயல்படுபவர்களைப் பற்றி கூறுகிறான். நீங்கள் இக்கட்டளைகளைப் பின்பற்றி நடக்காமலும் இதிலிருந்து முகம் திருப்பியதாலும் உள்ள குற்றம் உங்களைச் சார்ந்தாகும். நீங்கள் இது குறித்து கேள்வி கேட்கப்படுவீர்கள். ரஸுல் (ஸல்) அவர்கள் இதைப் பற்றி கேள்வி கேட்கப்பட மாட்டார்கள். இந்தக் குற்றத்திற்கான பொறுப்பு அல்லாஹ்வின் தூதரைச் சாராது. இறைக் கட்டளைகளை இறைத்தூதர் கொண்டு சேர்த்து விட்டார். அதன் பிறகு தூதரைப் பின்பற்றி வந்த கலீஃபாக்கள் இறைக் கட்டளைகளைக் கொண்டு சேர்த்து விட்டனர். இவ்வாறு அறிவுரை கூறுபவர்கள், ஷரீஅத்திற்கான சட்டதிட்டங்களை கற்பிப்பவர்கள் தமது பணியை நிறைவேற்றி விட்டனர். இதன்படி செயல்படாதவர்கள், செயல்படாமல் இருந்ததனால் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளனர்.

இங்கு நான் தூதருடன் கலீஃபாவையும் சேர்த்துக் கூறுகிறேன். இதன் ஒரு காரணத்தை நான் முன்னதாகக் கூறினேன். அதாவது உலில் அம்ரு மின்கும் என்று வந்துள்ளது. இரண்டாவது காரணம், நேர்வழி பெற்ற கிலாஃபத் என்பது தூதரின் பணியைத் தொடர்ந்து செய்வதற்காகத் தோன்றுகிறது. இது நுபுவ்வத்தின் ஒரு தொடர்ச்சியாகும். ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறினார்கள். நீங்கள் எனது நடைமுறையை பின்பற்றுங்கள். மேலும் குலஃபாயே ராஷிதீன் மஹ்தியீன்களின் வழிமுறையைப் பேணி நடக்க வேண்டும் என்று கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நடைமுறை மற்றும் ஷரீஅத்தைக் கொண்டு செல்பவர்களாக இருந்தனர். அந்த ஹதீஸின் முழு வடிவம் இதுவாகும்.

**ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அம்ர் ஸில்மி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** அவர்கள் ஒரு அன்ஸாரி சஹாபி இவ்வாறு கூறியதை ஒருமுறை கேட்டார்கள். அவர் கூறினார்: ஒருமுறை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விளைவு ஏற்படுத்தும் விதமாக எங்களுக்கு அறிவுரை கூறினார்கள். இதன் காரணமாக எங்களின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. எங்கள் உள்ளங்கள் அஞ்சின. நாங்கள் கூறினோம். அல்லாஹ்வின் தூதரே! இந்த அறிவுரை இறுதி அறிவுரையைப் போன்று உள்ளதே! நாங்கள் நேர்வழியில் நிலைத்திருக்கும் பொருட்டு எங்களுக்கு அறிவுரை கூறுங்கள் என்று கேட்டோம். அதற்கு ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நான் உங்களைப் பிரகாசமான வழியில் விட்டுச் செல்கிறேன். இந்த வழியின் இரவும் பகலைப் போன்றதாகும். தீயவரைத் தவிர வேறு யாரும் இதிலிருந்து வழிதவறமாட்டார். உங்களுள் உயிருடன் இருப்பவர் மிகப்பெரும் கருத்து வேற்றுமையைக் காண்பார். அவ்வாறான நிலையில் நீங்கள் என்னுடைய நன்கு தெரிந்த நடைமுறையைப் பின்பற்றி நடங்கள். மேலும் குலஃபாயே ராஷிதீன் அல் மஹ்தியீன்களின் நடைமுறையைப் பேணி நடக்க வேண்டும். நீங்கள் கட்டுப்படுதலை உங்கள் கடமையாக்கிக் கொள்ளுங்கள். ஒரு கருப்பர் இனத்தின் அடிமை உங்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டாலும் சரியே! இந்த மார்க்கத்தை நீங்கள் வலுவாகப் பற்றிப் பிடியுங்கள். மூஃமினுடைய உதாரணம் கடிவாளம் அணியப்பட்ட ஓர் ஒட்டகத்திற்கு ஒப்பானதாகும். அதை எங்கு அழைத்துச் சென்றாலும் உடன் செல்கிறது. அது கட்டுப்படுவதற்கான பழக்கம் உடையதாக இருக்கிறது.

எனவே இறைவன் கூறுகிறான்: *கட்டுப்படுவது உங்களுக்குக் கடமையாகும். நீங்கள் கட்டுப்பட்டால் நேர்வழி பெறுவீர்கள்.* இதன் பிறகு இறைவன் கிலாஃபத்தைப் பற்றிய கட்டளைகளை இட்டுள்ளான். இது ஆயத்தே இஸ்திக்லாஃபில் கூறப்பட்டுள்ளது. இறைவன் கூறுகிறான்:

ஈமான் கொண்டு நற்செயலாற்றுபவர்களுடன் இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான். நம்பிக்கை மற்றும் நற்செயல் ஆகியவற்றின் தரத்தை இறைவன் முதலில் கூறியுள்ளான். அதாவது முழுமையாகக் கட்டுப்படுவதன் பொறுப்பை உங்களது கழுத்தில் சுமந்து கொள்ளுங்கள். அப்போதுதான் உண்மையான மூஃமின் என்று அழைக்கப்படுவீர்கள். அப்போதுதான் நல்ல செயல்கள் செய்வதில் முன்னேறுபவர்களாக இருப்பீர்கள். நீங்கள் இந்த நிலையை அடைந்தால் பின்னர் கிலாஃபத்தின் அருட்கொடையிலிருந்து பலன் பெறுவீர்கள். இல்லையென்றால் பலன் பெற முடியாது. கண்டிப்பாக முஸ்லிம்களிடம் கிலாஃபத் நிலைத்திருக்கும் என்று இறைவன் கூறவில்லை. மாறாக சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தி வாக்குறுதி அளித்துள்ளான். அதில் முதன்மையான நிபந்தனை முழுமையாகக் கட்டுப்பட வேண்டும் என்பதாகும். கிலாஃபத்தே ராஷிதாவின் முதல் தொடர் முஸ்லிம்கள் கட்டுப்படுதலைக் கைவிட்டதன் காரணமாக முடிவுக்கு வந்தது. முஸ்லிம்கள் கட்டுப்படுதலைக் கைவிட்டதும் உண்மையான கிலாஃபத்திலிருந்து விலக்கப்பட்டனர். கட்டுப்படுதல் என்ற வட்டத்திலிருந்து வெளியேறி சிலர் நாங்கள் எங்களது பைஅத் உடன்படிக்கையை சில நிபந்தனைகளுக்கு உட்படுத்துகின்றோம் என்று கூற ஆரம்பித்தனர். இதற்கு ஒரு மிகப்பெரிய காரணம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பழி தீர்க்க வேண்டும் என்ற கொள்கையை உடையவர்களாக அவர்கள் இருந்ததாகும். அல்லது சில குழப்பவாதிகளின் குழப்பத்தில் அகப்பட்டு கட்டுப்படுதலிலிருந்து வெளியேறியவர்களாக அவர்கள் ஆனார்கள்.

அந்தக் காலத்தில் சஹாபாக்களும் இருந்தனர். இருந்தபோதிலும் முழுமையான கட்டுப்படுதலைக் கைவிட்ட பிறகு கிலாஃபத்திலிருந்து விலக்கப்பட்டு விட்டனர். கலீஃபாவை உருவாக்குவதற்கான தீர்மானத்தை இறைவன் தனது கையில் வைத்துள்ளான். எனவே கருத்து வேறுபாடு கொண்ட பின்னர், கட்டுப்படுதலைக் கைவிட்ட பின்னர் கலீஃபாவை ஏற்படுத்துவது மற்றும் கலீஃபாவாக தன்னை ஆக்கிக் கொள்வது ஆகிய அவர்களது எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தன. பின்னர் கிலாஃபத் ஆட்சி மன்னராட்சியாக மாறியது.

இறைவன் கிலாஃபத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்துள்ளான். அதை நுபுவ்வத்தின் வழியில் உருவாக்கினான். முந்தைய சமுதாயங்களில் நபியை இறைவனே அனுப்பினான். இப்போது ஷரீஅத் முழுமை பெற்று விட்டது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கியாமத் நாள் வரை ஷரீஅத்துடைய இறுதி நபியாவார்கள். எனவே கிலாஃபத்தே ராஷிதாவை இறைவன் உருவாக்கி விட்டான். இதை தேர்ந்தெடுப்பதற்கான முறையை இறைவன் மனிதனின் கையில் ஒப்படைத்துள்ளான். ஆனால் இறைவன் தனது செயல்பூர்வமான சாட்சியங்கள் மற்றும் உதவிகளின் மூலமாக இது தனது விருப்பத்தைச் சார்ந்துள்ளது என்று இறைவன் கூறுகிறான். இறுதியான வெற்றியை முழுமையான ஷரீஅத்தைக் கொண்ட இஸ்லாத்தின் மூலமாகவே நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று இறைவன் நாடிய காரணத்தால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமையாக ஒரு நபி தோன்றுவார் என்று முன்னறிவிப்பு செய்தான். இதன் விளக்கத்தை வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்ற வசனத்தில் கூறியுள்ளான். இதன் விளக்கத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் எனக்கும் மஸீஹுக்கும் இடையில் வேறு நபி இல்லை என்று கூறியுள்ளார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸீஹாகவும் மஹ்தியாகவும் நபியாகவும் காத்தமுல் குலஃபாவாகவும் இருக்கிறார்கள். இறைவன் 1400 வருடங்களுக்குப் பின்னர் மூஃமின்களுடன் தான் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக இந்த கலீஃபாவை தோற்றுவித்தான். இவர் இந்த உம்மத்தை (சமுதாயத்தைச்) சேர்ந்தவரான காரணத்தால் நுபுவ்வத் பதவியை அடைந்து மீண்டும் கிலாஃபத்தை உருவாக்குவதற்கான காரணமாக அமைந்து விட்டார்.

இறைவன் மேலும் கூறினான். இஸ்லாமிய மார்க்கத்தை இறைவன் தங்களுக்காக விரும்பியுள்ளான். எனினும் இதன் உண்மையான பலனையும் அச்சத்தின் நிலையை அமைதியின் நிலையாக மாற்றவும் முழுமையான கட்டுப்படுதல் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பு வைத்தல் ஆகியவற்றின மூலமே நீங்கள் பெற முடியும். இது கண்டிப்பானதாகும். இந்த அமைப்புடன் இணைந்திருப்பவர்களின் எல்லா அச்ச நிலையும் அமைதியின் நிலையாக மாறிக் கொண்டே செல்லும். அந்த கலீஃபாக்களின் மூலமாக இஸ்லாத்தின்

வெற்றிக்கான நாட்களும் நெருங்கிக் கொண்டே செல்லும். ஆனால் இங்கு கிலாஃபத்துடன் தம்மை இணைத்துக் கொள்கின்றவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. அவர்கள் இறைவனை மிகவும் தூய உள்ளத்துடன் வணங்குபவர்களாக இருக்க வேண்டும். தொழுகையை நிலைநாட்டுவதும் தூய ஏகத்துவத்தை நிலைநாட்டுவதும் அதற்கான முயற்சி ஆகியவை கிலாஃபத்தின் பலனுடன் அவர்களுக்கு கிடைத்துக் கொண்டே இருக்கும். அவர்களின் துஆக்களை இறைவன் ஏற்றுக் கொள்வான். அவர்களின் துயரங்களை இறைவன் அகற்றுவான். தனது அருட்கொடைகளை அவர்களுக்கு வழங்குவான். ஆனால் இவை அனைத்தையும் பார்த்த பிறகும் உண்மையான கிலாஃபத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளாதவர்களைப் பற்றி இறைவன் அவர்கள் கட்டுப்படாதவர்களாவர் என்று கூறுகிறான். அவர்கள் கட்டுப்படாததற்கான தண்டனை அவர்களுக்கு கிடைக்கும். மூஃமின்களுக்கு இறைவன் வழங்குவதாகக் கூறியுள்ள அருட்கொடைகளிலிருந்து அவர்கள் பேரிழந்தவர்களாக இருப்பார்கள்.

இன்றைய முஸ்லிம் சமுதாயத்தைப் பாருங்கள். ஒருவித நிம்மதியின்மை இவர்களை சூழ்ந்துள்ளது. அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்து முஸ்லிம்களைக் கொல்வதற்கு முஸ்லிம்களே பிறருடைய உதவியை நாடுகின்ற அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர். இதை நான் பலமுறை கூறியுள்ளேன். இறைவன் முஸ்லிம் சமுதாயத்திற்கு சத்தியத்தை உணர்ந்து கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

இதன் தொடர்ச்சியாக நான் ஓதிய வசனங்களின் மூன்றாவது அம்சம் அமைந்தள்ளது. இதில் மீண்டும் மூன்று அம்சங்களின்பால் கவனமூட்டப்பட்டுள்ளது. 1) தொழுகைகளை நிலைநாட்டுதல் 2) ஸக்காத் கொடுத்தல் 3) முழுமையாக கட்டுப்படுதல். இதனால் இறைவன் கருணை காட்டியவாறு தனது அருட்கொடைகளை வழங்கிக் கொண்டிருப்பான்.

இப்போது இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலமாக தனது அருட்கொடைகளின் தொடரை தொடங்கியுள்ளான். இதிலிருந்து பலன் பெறுவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் இறைவனின் இந்த கட்டளையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவனது வாக்குறுதி முழுமையாகக் கட்டுப்படுபவர்களுடன் உள்ளதாகும். அவர்கள் இறைவணக்கத்தை எப்போதும் கவனத்தில் முதன்மையாகக் கொண்டவர்களாவர். ஏனென்றால் எப்போதும் இறைவனை நினைவில் கொள்பவர் தான் முழுமையாகக் கட்டுப்படுபவராவார். அவர் இறைவனை வணங்குபவராக இருப்பார். இறைவனை வணங்குவதற்கான மிக உன்னதமான வழி தொழுகைகளை நிலைநாட்டி வருவதாகும் என்று நமக்கு கூறப்பட்டுள்ளது.

எனவே, தொழுகைகளை நிலைநாட்ட முழுமையாக முயற்சி செய்பவரே இறை இயக்கத்தின் உண்மையான அங்கமாக இருக்க முடியும். தொழுகைகளை நிலைநாட்டுவது தொடர்பான மிகவும் உன்னதமான விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஜுமுஆ தொழுகையானது எல்லா தொழுகைகளிலும் மிகச் சிறந்த பகுதியாகும். இதில் இமாம் குத்பா கொடுப்பதுடன் அறிவுரையும் கூறுகிறார்.

காலத்தின் கலீஃபா உலகத்தின் சூழ்நிலையைப் பார்த்து பல்வேறு சமுதாயங்களுக்கு தேவைக்கேற்றவாறு அறிவுரை கூறுகிறார். இதனால் சமுதாயத்தில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உருவாகிறது. எல்லாருடைய கிப்லாவையும் ஒரே திசையை நோக்கி இருக்கும்படி செய்கிறார்.

இதன் உண்மை வடிவம் இன்று நம் முன் இருப்பதை நாம் காண்கிறோம். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நமக்கு தென்படுகிறது. காலத்தின் கலீஃபாவின் குத்பா உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் ஒரே நேரத்தில் கேட்கப்படுகிறது. அதில் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப தேவைகளை கருத்தில் கொண்டு அறிவுரை வழங்கப்படுகிறது. நான் குத்பாவிற்காக குறிப்பு எழுதுகின்ற போது என் கண் முன்னால் இருக்கின்றவர்களைப் பற்றி மட்டும் நான் எண்ணுவதில்லை. மாறாக உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து எனக்கு அறிக்கைகள் வருகின்றன. அவைகளைக் கவனத்தில் கொண்டவாறு சில நேரம் ஐரோப்பாவின்

நிலைக்கேற்ப போதனையை குத்பாவில் செய்கிறேன். சில நேரம் ஆசியாவின் ஏதாவது நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப குத்பா கொடுக்கிறேன். அல்லது பொதுவான அவர்களது வாழ்க்கையைப் பற்றி நான் குத்பா கொடுக்கின்றேன். சில நேரம் ஆப்பிரிக்காவைப் பற்றி குத்பா கொடுக்கிறேன். சில சமயம் தீவு நாடுகளைப் பற்றியும் குத்பா கொடுக்கிறேன். ஆனால் இஸ்லாம் ஒரு சர்வதேச மார்க்கமாகும். எனவே கூறப்படுகின்ற ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கின்ற ஒவ்வொரு அஹ்மதிக்கும் பொருந்துகின்ற அறிவுரையாக அமைகிறது. அவர்களது ஏதாவது ஒரு சில நிலைமைக்கேற்ற அறிவுரை அதில் அடங்குகிறது. அல்லது வேறு யாரையாவது கருத்தில் கொண்டு போதனை செய்யும் போது அது எல்லாருக்கும் பொருந்துகிறது. எனது குத்பாவிற்குப் பிறகு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து எனக்கு கடிதங்கள் வருகின்றன. அதில் ரஷ்யாவில் வாழும் அஹ்மதிகளின் கடிதங்களும் அடங்கும். ஆப்பிரிக்காவில் வசிக்கும் அஹ்மதிகளின் கடிதங்களும் அடங்கும். இன்னும் பிற நாடுகளில் வசிக்கின்ற அஹ்மதிகளின் கடிதங்களும் அடங்கும். அதில் இந்த குத்பா எங்களுக்காகவே கொடுக்கப்பட்டதைப் போன்று நாங்கள் உணர்கிறோம் என்று கூறுகின்றனர்.

ஆக, இகாமத்துஸ் ஸலாத் என்பதன் ஒரு கருத்து இதுவாகும். அதாவது கிலாஃபத்தின் மூலமாக அஹ்மதிய்யத்தின் உலகில் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிறகு ஸக்காத் செலுத்துவது தொடர்பாக கூறப்பட்டுள்ளது. இது செல்வங்களை தூய்மைப்படுத்தும் வழியாகும். இதில் ஸக்காத் மற்றும் இன்ன பிற பொருள் தியாகங்களும் அடங்கும். இன்று இதுவும் உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப உலகில் சந்தா அமைப்பின் வாயிலாக ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஜமாஅத்துகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. ஒரு நாட்டில் ஏதாவது தேவை காணப்பட்டால் பிற நாட்டிலிருந்து அது நிவர்த்தி செய்யப்படுகிறது. ஒரு நாட்டில் செல்வம் அதிகமாக இருந்தால் ஏழை நாட்டின் தேவைகள் தப்லீக் மற்றும் நூல்கள் வெளியிடுதல் மற்றும் பள்ளிவாசல்கள் பள்ளிவாசல் கட்டுதல் போன்ற வழிகளின் மூலம் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஆக இந்த ஒரு அமைப்பானது காலத்தின் கலீஃபாவின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் ஏழைகளின் தேவை நிவர்த்தி செய்யப்பட்டுகிது. சில இடங்களில் மருத்துவ தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. சில இடங்களில் கல்விக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. சில இடங்களில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதற்கான தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஸிய்யத் அமைப்பையும் கிலாஃபத் அமைப்பையும் சேர்த்து கூறியுள்ளார்கள். இதில் இவ்வனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதைப் பற்றியும் கூறியுள்ளார்கள். பிறகு மக்கள் சந்தா கொடுக்கிறார்கள் என்றால் கிலாஃபத் அமைப்பு இருக்கின்ற காரணத்தால் அவர்கள் கொடுக்கின்ற சந்தா வீணாக செலவழிக்கப்படாது என்ற ஒரு நம்பிக்கையில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த சந்தாக்கள் யாவும் நேர்மையான குறிக்கோளுக்காக செலவு செய்யப்படும் என்று நம்புகின்றனர். ஜமாஅத்தைச் சேராத அந்நியர்களும் கூட அஹ்மதிகளிடம் நாம் ஸக்காத் செலுத்தினால் அது சரியாக, முறையாக செலவு செய்யப்படும் என்று நம்புகின்றனர். கானாவில் என்னிடம் பலர் தமது விளைச்சல்களுக்கான ஸக்காத்தை கொடுத்துச் செல்வார்கள். நீங்கள் தான் இதை சரியாக பயன்படுத்துகிறீர்கள் என்று கூறி நமது பள்ளியில் அதை செலுத்தி விட்டு செல்வார்கள். பலர் என்னிடம் கொடுத்து நீங்களே இதை செலுத்தி விடுங்கள் என்று நம்பி கொடுப்பார்கள். ஏனென்றால் நாங்கள் இதை எங்களுடைய மவ்லவிகளிடம் கொடுத்தால் எங்களுடைய இமாம்களிடம் கொடுத்தால் அவர்கள் அதை விழுங்கி விடுவார்கள். அதை சரியான முறையில் பயன்படுத்தமாட்டார்கள் என்று கூறுவார்கள்.

இன்றும் பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து பல கடிதங்கள வருகின்றன. அதில் ஜமாஅத்தைச் சேராத அந்நியர்கள் ஜமாஅத்தில் சந்தா கொடுக்க விரும்புகின்றனர். அவர்களைப் பற்றி என்ன வழிகாட்டல் உள்ளது? என்று கேட்கிறார்கள். ஸக்காத் மற்றும் ஸதகாவைப் பொருத்தவரை ஜமாஅத் அதை பெறுகிறது. ஆனால்

பிற கட்டாய மற்றும் விருப்பச் சந்தாக்கள் அஹ்மதிகளிடமிருந்து மட்டுமே வசூலிக்கப்படுகின்றன. ஆக ஸக்காத் அமைப்பும் கிலாஃபத் அமைப்பைச் சேர்ந்ததாகும்.

இறுதியில் இந்த வசனத்தில் மீண்டும் கட்டுப்படுதலைப் பற்றி கூறப்பட்டுள்ளது. எனவே இறைவன் மற்றும் அவனது தூதருடன் உண்மையான தொடர்பும் அதன் விளைவாக கிலாஃபத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கான அடிப்படை முழுமையான கட்டுப்படுதலாகும். இது இருப்பின் மூஃமின் இறை அருட்கொடைகளுக்கு வாரிசாகிக் கொண்டே இருக்கலாம்.

இப்போது நான் அல் வஸிய்யத் என்ற நூலிருந்து சிலவற்றை எடுத்துரைக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் வாக்குறுதிகள் மற்றும் முன்னறிவிப்புகளைப் பற்றி நமக்கு எடுத்துக் கூறுகிறார்கள். அதில் இறைவன் புறமிருந்து வாக்குறுதியும் சில அறிவிப்பும் இருந்தது. மரணத்தின் நேரம் நெருங்கி விட்டது. எனவே மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது காணப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நாம் அகற்றி விடுவோம் என்று இறைவன் கூறினான். மேலும் நான் உம்முடன் திருப்தி கொள்வேன். மிகத் தெளிவான அடையாளங்ளை நான் உமக்காக எப்போதும் ஏற்படுத்துவேன் என்றும் கூறினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இழிவுபடுத்த விரும்பியவர்கள் மற்றும் இதற்காக முயற்சி செய்தவர்கள் அனைவரும் இழிவடைந்தனர். அவர்களின் அடையாளமும் பெயரும் உலகிலிருந்து அழிந்து விட்டது. இன்று அவர்களை நினைவு கூறுபவர் யாரும் உலகில் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசியவர்களும், திட்டியவர்களும் மரணித்து மக்கிப்போனார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தோ உலகில் பரவிக் கொண்டிருக்கிறது. அடையாளங்களின் தொடர் அவர்களின் வாழ்நாளில் ஆரம்பித்தது. அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான பைஅத்துகள் ஒவ்வொரு வருடமும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை இறைவனிடமிருந்து வழிகாட்டல் பெற்று நடக்கின்றன. இது இறைவனின் உதவிக்கான அடையாளமாகும். இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கான அடையாளமாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பெரும் துன்பங்கள் வரும் என்றும் பல ஆபத்துகள் பூமியில் இறங்கும் என்றும் அவற்றில் சில என் வாழ்நாளிலும் மற்றும் சில எனது மறைவுக்குப் பின்னர் வெளிப்படும் என்றும் அவன் இந்த இயக்கத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவான் என்றும் அவற்றில் சில எனது கரங்களாலும் மற்றும் சில நான் மறைந்த பிறகும் நிறைவேறும் என்றும் இறைவன் என்னிடம் கூறினான். (உயில் 9,10)

ஆக, இன்று நாம் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதைப் பார்க்கின்றோம். அழிவுகளும் இப்போது மிகவும் பலமாகிக் கொண்டே செல்கின்றன. தினந்தோறும் செய்தித்தாளில் ஏதாவது நாட்டில் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டதற்கான செய்திகள் காணப்படுகின்றன. இந்த சீற்றங்கள் மற்றும் அழிவுகளைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னறிவிப்பு செய்கிறார்கள். இவை ஏற்படும் என்று கூறுகிறார்கள். அறிவுடையவர்களுக்கு இது போதுமானதில்லையா? வாதிப்பவர் ஒருவர் இறைவன் புறமிருந்து செய்தியைப் பெற்று இவ்வாறு சீற்றங்களும் அழிவுகளும் நிலநடுக்கங்களும் ஏற்படும் என்று அறிவிக்கின்றார். இன்று எல்லா வித அழிவும் உலகத்தை சூழ்ந்துள்ளதை நாம் பார்க்கிறோம். இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இறைவனால் அனுப்பப்பட்டவரின் செய்திகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று உலகில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்க்கின்றவர்கள் இதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்போதும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்ப்பதில் மும்முரமாக இருப்பவர்கள் குறிப்பாக இதை சிந்திக்கும் தருணம் இதுவாகும். இவர்களின் எல்லா வித முயற்சிகளுக்குப் பின்னரும் ஜமாஅத்தின் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக்கொண்டே செல்கிறது. இது ஒரு மனிதரின் வேலையாக இருக்க முடியுமா? இவ்வளவு முன்னேற்றம் காண்கிறது. மக்களின் உள்ளங்களில் இது விளைவை ஏற்படுத்துகிறது. இறைவன் தான் உள்ளங்களை காலத்தின் இமாமின் பால் திருப்புகிறான். இறுதியில் எதுவரை இவர்கள் இறைவனிடம்

போட்டிப் போடுவார்கள்? இதனால் இம்மையையும் மறுமையையும் வீணாக்குவதை தவிர இவர்களுக்கு வேறெதுவும் கிடைக்கப் போவதில்லை. இதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாகக் கூறியுள்ளார்கள். உங்கள் கண்கள் அழுகினாலும் உங்கள் மூக்கு தேய்ந்தாலும் உங்களால் என்னை எதுவும் செய்ய முடியாது. உங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று கூறுகிறார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான்.

*நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம்* என்று அல்லாஹ் கூறியுள்ளான். எனவே அவன் தனது நபிமார்களுக்கும், தூதர்களுக்கும் உதவி செய்கிறான். அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும் தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இவைனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமல் ஆக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும் எந்த நேர்வழியை அவர்கள் உலகல் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால் அவர்களது கைகளால் அதனை அவன் முழுமையாக நிறைவு செய்ய வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து எதிரிகளுக்கு ஏளனம் செய்யவும், பழிச்சொற்களையும், அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகின்றனர். அவர்கள் ஏளனம் பரிகாசம் செய்த பிறகு மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையைக் காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டி விடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான். (உயில் : 10)

இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு இதற்கு சான்று பகர்கிறது. இறைவன் வழங்கிய வாக்குறுதி மற்றும் முன்னறிவிப்புகள் ஆகியவற்றை காலத்தின் இமாமின் மூலம் அறிவிப்பு செய்ய வைத்தான். அது ஒவ்வொரு நொடியும் புத்தம் புதிய பொலிவுடன் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அது முதல் கலீஃபாவின் காலமாக இருந்தாலும் சரி அப்போதும் நிறைவேறி வந்தன. அந்தக் காலத்தில் வெளிப்புறமிருந்து ஜமாஅத்திற்கு எதிர்ப்பு இருந்தது மட்டுமின்றி ஜமாஅத்தின் உள்ளேயும் குழப்பம் தலைதூக்க ஆரம்பித்தது. இரண்டாவது கலீஃபாவின் காலகட்டத்தில் கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து ஏறக்குறைய இரண்டாவது கிலாஃபத்தின் இறுதி வரை பல்வேறு குழப்பங்கள் ஜமாஅத்தினுள் அவ்வப்போது எழுந்தன. இதனால் ஜமாஅத்தின் ஒரு பிரிவு தனியாகப் பிரிந்து சென்றது. மேலும் வெளியிலிருந்தும் எதிர்ப்பு உச்சத்தை அடைந்தது. ஆனால் ஜமாஅத்தின் முன்னேற்றம் நிற்கவில்லை. பிறகு மூன்றாவது கலீஃபாவின் காலகட்டத்தில் வெளியிலிருந்து எதிர்ப்பும் சில ஜமாஅத்தின் உள்ளேயும் குழப்பங்கள் தலைதூக்கின. ஆனால் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே இருந்தது. கிலாஃபத்தே அஹ்மதிய்யா இறைவனது அருளால் ஜமாஅத்தை வளர்த்துக் கொண்டே இருந்தது. பிறகு நான்காவது கிலாஃபத்திற்கான காலம் வந்தது. இதில் எதிரிகள் தமது கண்ணோட்டத்தில் ஜமாஅத் இனி தப்பிக்கவே முடியாது என்ற நிலையில் ஜமாஅத்தை முழுமையாக தாக்கி விட்டதாக எண்ணினர். இதிலிருந்து தப்பிக்க வேறு வழியே இல்லை என்று நினைத்தனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகள் தனது பொலிவுடனும் மகத்துவத்துடனும் நிறைவேறியது. அதாவது இறைவன் இரண்டாவது முறையாக தனது ஆற்றல்வாய்ந்த வல்லமையின் கையைக் காட்டுகிறான் என்று கூறினார்கள். அவ்வாறே அது வெளிப்பட்டது. அந்த வல்லமை எதிரிகளை தூள்தூளாக்கி விட்டது.

இப்போது ஐந்தாவது கிலாஃபத்திற்கான காலம் நடக்கிறது. இக்காலத்திலும் பொறாமை மற்றும் எதிர்ப்பின் நெருப்பு கடுமையாகி விட்டது. பலவீனமான நிராயுதபானியாக இருக்கும் அஹ்மதிகளின் மீது

அநியாயம் செய்தவாறு இரத்தத்தால் ஹோலி விளையாடப்படுகிறது. இதைப் பார்த்து இது மனிதனுடைய செயலா? அல்லது மிருகத்தை விட கொடிய வேறு ஏதாவது படைப்பினம் செய்த செயலா? என்று வித்தியாசம் அறிந்து கொள்வது கடினமாகி விட்டது. மேலும் ஜமாஅத்திலும் ஜமாஅத்திற்கு அனுதாபம் காட்டுபவர்களைப் போல் இருந்து ஜமாஅத்தினுள் பிளவு ஏற்படுத்துவதற்கு சில இடங்களில் முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப இறைவனின் உதவியைப் பெற்ற கிலாஃபத்தின் மிகவும் மகத்துவம் வாய்ந்த இறை வல்லமை இதை எதிர்கொண்டு வருகிறது. இவ்வாறு இறைவன் இதை பாதுகாத்து வருகிறான்.

நான் ஒரு பலவீனமான திறன்களற்ற மனிதனாவேன். எனக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆனால் கிலாஃபத்தே அஹ்மதிய்யாவிற்கு வல்லமை வாய்ந்த ஆற்றல்கள் உடைய அந்த இறைவனின் உதவி உள்ளது. அந்த இறைவன் நான் எனது வல்லமையைக் காட்டுவேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான். அதன்படி இப்போதும் தனது வல்லமையைக் காட்டி வருகிறான். இன்னும் காட்டி வருவான். எதிரிகள் எப்போதும் தனது சூழ்ச்சிகளிலிலும் தீய திட்டங்களிலும் முயற்சிகளிலும் தோல்வியடைந்து கொண்டே செல்வார்கள். தோல்வியடைந்து கொண்டிருக்கிறார்கள்.

எதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை திரித்துவம் மாற்றியும் கூறுவதற்காக இன்றைய நாட்களில் எலக்ட்ரானிக் மீடியாவை பயன்படுத்த முயற்சி செய்துள்ளன. இதற்கு பல்வேறு இன்டர்நெட்டின் வழிகளைப் பயன்படுத்துகின்றனர். கிலாஃபத்தின் வழிகாட்டலின்படி உலகில் ஒவ்வொரு நாட்டிலும் இறைவன் இளைஞர்கள் அடங்கிய ஒரு இராணுவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். இவர்கள் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைப் போன்று பணியாற்றுகிறார்கள். இவர்கள் எதிரிகளின் முன்னால் நெஞ்சை நிமிர்த்தியவாறு நிற்கின்றனர். இவர்கள் தருகின்ற பதிலைப் பார்த்தால் நம்மையும் அறியாமல் இறைவனின் புகழ் நமது உள்ளங்களில் உருவாகிறது. மேலும் அவனது வாக்குறுதிகளின் மீது ஈமானும் உறுதியான நம்பிக்கையும் வளர்ந்து கொண்டே செல்கிறது.

இரண்டாவது வல்லமை நிலைபெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு ஆறுதல் வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அன்பிற்குரியவர்களே! தொன்றுதொட்டு இறைவனின் நடைமுறை இதுவாகும். அவன் எதிரிகளின் இரண்டு போலி மகிழ்ச்சியை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளை வெளிப்படுத்துகிறான். எனவே, இப்போது இறைவன் தனது பழைமையான அந்த நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. எனவே, நான் உங்களுக்கு கூறியதற்காக நீங்கள் வருந்த வேண்டாம்.

**அதாவது தமது மரணத்தைக் குறித்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்கள் உள்ளம் கவலையடைய வேண்டாம். ஏனெனில் இந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது நிரந்தரமாக உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யா (என்ற நூலில்) குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வாக்குறுதி என்னைப் பற்றியல்ல. மாறாக, அது உங்களைப் பற்றிய வாக்குறுதியாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என்று இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வர வேண்டியது அவசியமாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையாளனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனும் ஆவான். அவன் வாக்குறுதி அளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் நாட்களாகும்.

ஆனால் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிச்சயமாக நிலைபெற்றிருக்கும். (உயில் 12, 13)

எனவே கிலாஃபத்தே அஹ்மதிய்யாவிற்கு வாக்குறுதி நிரந்தரமானதாகும். இது பிற்காலத்தில் வருபவர்களுக்காக செய்யப்பட்டதாகும். கிலாஃபத்துடன் எப்போதும் சேர்ந்திருக்க வேண்டும். எப்போதும் விசுவாசத்துடன் இருப்பவர்களும் இறைவனின் இந்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேறுவதைக் கண்டு வருவார்கள். எதிரிகள் மற்றும் தீய இயல்புடைய மனிதர்களின் கண்கள் குருடாக உள்ளன. இதனால் இறைவனின் உதவிக்கான காட்சிகள் அவர்களுக்குத் தென்படுவதில்லை. இறைவனது அருளால் நாம் ஒவ்வொரு கணமும் இறைவனின் வல்லமையின் காட்சிகளைப் பார்த்து வருகிறோம். இதற்காக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நம்மைக் குறித்து வாக்குறுதி அளித்துள்ளான். இதற்கான புதிய பொலிவு நமக்கு தினமும் தென்படுகிறது. எதிரிகளின் வரம்பு மீறுதல், நிராயுதபானியாக இருக்கும் அஹ்மதிகளின் மீது ஆயுதங்களைக் கொண்டு தாக்குவது ஆகியவை எதிரிகள் நம்மை ஆதாரங்களைக் கொண்டு எதிர்கொள்ள முடியாது என்பதை நிரூபிக்கிறது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஆதாரங்களைக் கொண்டு மக்களுடைய வாயை அடைக்கிற தென்றால் இது இறைவனுடைய வாக்குறுதி நிறைவேற்றுவதற்கான அடையாளமாகும்.

**இறைவன் கூறுகின்றான்:**

உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன்.

இந்த மேன்மை வலுவான சான்றுகளைக் கொண்டதாகும். இதை மறுப்பதற்கு எந்த எதிரியிடமும் திறமை இல்லை.

பிறகு கிலாஃபத்தே அஹ்மதிய்யாவைப் பற்றி கூறியவாறு மீண்டும் இறைவனது இரண்டாவது வல்லமை வெளிப்படும் என்று கூறி இது நிலைநாட்டப்படுவதற்கான வழிமுறையையும் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் இறைவன் புறமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறை வல்லமையின் தோற்றமாவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்றுசேர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுசேர்ந்து துஆவில் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமைமிக்க இறைவனாவான் என்பதை உங்களுக்கு காட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்த நேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்.

தூய மனதைக் கொண்ட ஜமாஅத்தின் சான்றோர்கள் என் பெயரில் எனக்குப் பிறகு மக்களிடம் பைஅத் வாங்க வேண்டும். ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனது குறிக்கோளாகும். இதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். எனக்குப் பிறகு யாராவது இறைவனிடமிருந்து பரிசுத்த ஆவியைப் பெறாதவரை நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பணியாற்றுங்கள். (உயில் 13,14)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதில் தமது மரணத்திற்குப் பிறகு கலீஃபா ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரைக்கும் மேலும் ஒவ்வொரு கலீஃபாவின் மரணத்திற்குப் பின்னர் அடுத்த கலீஃபா

உருவாகும் வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் நீங்கள் தவறிப் போய் விடாதீர்கள் என்று வலியுறுத்தியுள்ளார்கள். இரண்டாவது வல்லமையிலிருந்து நீங்கள் பலன்பெற விரும்பினால் இந்த இடைப்பட்ட காலத்தில் ஒன்றாக சேர்ந்திருங்கள். துஆ செய்து கொண்டிருங்கள். அதோடு கலீஃபாவைத் தேர்ந்தெடுங்கள் என்றும் வலியுறுத்துகிறார்கள்.

இங்கு கூறப்பட்டுள்ளதன் படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தூய மனம் கொண்ட சான்றோர்கள் என்னுடைய பெயரைச் சொல்லி மக்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறுகிறார்கள். இதை நாம் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. கிலாஃபத் என்பது ஒரு மனிதரைச் சார்ந்ததல்ல. மாறாக இது சில மனிதர்களைச் சேர்த்து எல்லாரையும் சார்ந்ததாகும் என்று தவறாக நினைக்கக் கூடாது. இதை காரணம் காட்டியே பைஅத் செய்யாதவர்கள் அஞ்சுமனை மேலானதெனக் கருதத் தொடங்கினர். ஆனால் இதற்கான விளக்கத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் அடிக்குறிப்பிலேயே எழுதி விட்டார்கள்.

இப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுப்பது நம்பிக்கையாளர்களின் ஒருமித்தக் கருத்தின் அடிப்படையில் அமையும். எந்த நபர் தொடர்பாக அவர் எனது பெயரால் மக்களிடம் பைஅத் வாங்கத் தகுதியுடையவர் என்பதில் நாற்பது நம்பிக்கையாளர்களுக்கு ஒருமித்த கருத்து இருக்குமோ அவருக்கு பைஅத் வாங்க அனுமதியுண்டு. அவர் தன்னை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இங்கு அந்த நபர் பைஅத் வாங்கத் தகுதியுடையவர் ஆவார் என்று ஒருமைச் சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். எனவே இங்கு அஞ்சுமனைக் குறிக்காது. மாறாக, கலீஃபாவைக் குறிக்கும். மேலும் பன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்திலும் அஞ்சுமனைக் குறிக்காது. மாறாக கலீஃபாக்களையே அது குறிக்கும்.

எனவே, இந்த கோட்பாட்டைக் கருத்தில் கொண்டு ஜமாஅத்திலும் கலீஃபாவை தேர்வு செய்வதற்கான சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதன்படி இரண்டாவது கிலாஃபத்திற்குப் பின்னர் இருந்து இப்போது வரை கலீஃபாவை தேர்ந்தெடுக்கும் முறை செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது இறைவன்தான் கலீஃபாவைத் தேர்வு செய்கிறான் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்டால் அதற்குரிய பதில், இறைவன் அந்த கலீஃபாவுக்கு வழங்குகின்ற உதவிகளும் அடையாளங்களும் ஆகும். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இறைவன் காட்டுகின்ற உண்மையான கனவுகள் ஆகியவை இதற்குப் போதுமான சாட்சியங்கள் ஆகும். அது மட்டுமின்றி காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளை உளமாற ஏற்று நடப்பதாகும். உள்ளங்கள் காலத்தின் கலீஃபாவிற்கு ஆதரவாகத் திரும்புகின்றன. இவையனைத்தும் அந்த கலீஃபா இறைவன் புறமிருந்து தோன்றியவராவார் என்பதற்கான ஆதாரங்களாகும்.

இதற்கான உதாரணங்களை நான் முன்னதாக பலமுறை கூறியிருக்கிறேன். எதிரிகள் ஜமாஅத்தை எந்த அளவிற்கு எதிர்த்தனர் என்றும் அதற்கெதிரில் இறைவன் ஜமாஅத்திற்கு ஆதரவாக எப்படி அடையாளங்களை வெளிப்படுத்தினான் என்பதையும் நான் பலமுறை கூறியுள்ளேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல் வஸிய்யத் என்ற நூலில் ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவர்களாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:

நீங்களும் இரக்கத்தன்மை, தமது ஆன்மாக்களை தூய்மை செய்தல் ஆகியவற்றின் மூலம் பரிசுத்த ஆவியின் பங்கினைப் பெற வேண்டும். ஏனெனில் பரிசுத்த ஆவியின்றி உண்மையான இறையச்சத்தைப் பெற முடியாது. மன இச்சைகளை முற்றிலும் விட்டு விட்டு இறை விருப்பத்தைப் பெறும் பொருட்டு எல்லா வழிகளையும் விட குறுகிய வழியினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உலக இன்பங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அவை இறைவனிடமிருந்து விலக்கி விடுகின்றன. இறைவனுக்காக கசப்பான வாழ்வை மேற்கொள்ளுங்கள். இறை விருப்பத்தைப் பெற்றுத் தரக்கூடிய துன்பம் அவனை கோபமூட்டக்கூடிய இன்பத்தை விட சிறந்ததாகும். இறை கோபத்திற்கு காரணமாக அமையும் வெற்றியை விட இறை திருப்தியைப்

பெறக்கூடிய தோல்வியே சிறந்ததாகும். இறைவனுடைய கோபத்திற்கு அருகில் கொண்டு செல்லும் அன்பை விட்டு விடுங்கள். நீங்கள் தூய உள்ளத்துடன் அவன் பக்கம் வருவீர்கள் என்றால் ஒவ்வொரு வழியிலும் அவன் உங்களுக்கு உதவி செய்வான். எந்த எதிரியாலும் உங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது.

நீங்கள் உங்கள் விருப்பத்தையும் இன்பங்களையும் கண்ணியத்தையும் செல்வத்தையும் உயிரையும் துறந்து மரணத்தின் காட்சியை உங்கள் முன்னால் கொண்டு வருகின்ற அந்த கசப்புகளைத் தாங்கிக் கொள்ளாமல் எந்த நிலையிலும் நீங்கள் இறை திருப்தியைப் பெற முடியாது. ஆனால் நீங்கள் இந்தக் கசப்புகளைச் சகித்துக் கொண்டால் ஒரு அன்பான குழந்தையைப் போன்று இறைவனின் மடியில் அமர்ந்து கொள்வீர்கள். உங்களுக்கு முன்னால் சென்ற நேர்மையான நல்லடியார்களின் வாரிசாக நீங்கள் ஆக்கப்படுவீர்கள். மேலும் ஒவ்வோர் அருளின் கதவுகளும் உங்களுக்காகத் திறக்கப்படும். (உயில் : 15)

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கையால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும். பூக்கும். எல்லா திசைகளிலும் இதன் கிளைகள் படரும். பின்னர் இது ஒரு பெரிய மரமாகி விடும் என்று இறைவன் கூறினான். எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்களாவர். ஏனென்றால் சோதனைகள் வருவது அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என்று உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான். ஏதாவது சோதனையில் தடுமாற்றமடைபவன் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த மாட்டான். மேலும் பாக்கியமற்ற நிலை அவனை மரணத்திற்கு இட்டுச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்திருந்தால் அது அவனுக்கு நன்றாக இருந்திருக்கும். எவர் இறுதி வரை பொறுமையை மேற்கொள்வதுடன் துன்பங்கள் என்னும் பூமியதிர்ச்சிகளையும் ஆட்டங்காணச் செய்யும் விபத்துகள் எனும் புயல்களையும் தாங்கிக் கொண்டு உலகவாசிகள் அவர்களுடன் கடுமையான வெறுப்புடன் நடந்து கொள்வதையும், சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும் இழிசொற்களையும் பொருட்படுத்தாது இருப்பார்களோ அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள். அருள்களின் வாசல்கள் அவர்களுக்காகத் திறக்கப்படும்.

என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கூறியுள்ளதாவது: உலகப் பற்று கலக்காத வஞ்சகமோ கோழைத்தனமோ கலக்காத கட்டுப்பாட்டின் எந்தத் தகுதியினையும் இழக்காத நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே சத்தியத்தின் வழி நடப்பவர் ஆவர் என்று இறைவன் கூறுகிறான். (உயில் : 17,18)

இன்று இறைவனின் அருளால் உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிகளின் தியாகங்களின் தரம் உயர்ந்து கொண்டே செல்கிறது. இறைவனின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேறுவதைக் காண்கின்றோம். எவ்வாறு தைரியமாக எவ்வளவு உறுதிப்பாட்டுடன் அஹ்மதிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து வருகின்றார்கள்? ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த மேற்கோள்களில் சில எச்சரிக்கையும் காணப்படுகிறது. இதில் நற்செய்திகளும் உள்ளன. இதை அவர்கள் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் இணைந்துள்ளவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த நற்செய்திகளிலிருந்து பங்கு பெறுவதற்காக இறைவனின் வாக்குறுதிகளிலிருந்து பலன் பெறுவதற்காக இறைவனின் கண்ணியத்தை உள்ளங்களில் நிலைநாட்டுபவர்களாக ஆவது நம்மில் ஒவ்வொருவருக்கும் கடமையாகும். செயல்பூர்வமாக இறைவனது ஏகத்துவத்தை வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். மனித இனத்துடன் உண்மையான அனுதாபம் கொள்பவர்களாக இருக்க வேண்டும். உள்ளங்களை காழ்ப்புணர்ச்சி மற்றும் வஞ்சகத்திலிருந்து தூய்மையாக்குபவர்களாக இருக்க வேண்டும். எல்லா நன்மைக்குரிய வழியிலும் முன்னேறுபவர்களாக

இருக்க வேண்டும். நாம் நமது ஈமானைப் பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டும். முழுமையாக கட்டுப்படுதலின் முன்மாதிரியைக் காட்டுபவர்களாக இருக்க வேண்டும். ஈமானில் முன்னேறுபவர்களாக இருக்க வேண்டும். இதனால் இறைவனது பார்வையில் நாம் சத்தியத்தின் வழி நடப்பவர்களாக எண்ணப்படுவோம். நாம் அவனது வாக்குறுதிகளிலிருந்து பலன்பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்.

அல் வஸிய்யத் என்ற இந்த நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறையச்சம் கொண்ட நல்லடியார்களுக்காகவும் உயர் தரமான ஆன்மீகத் தகுதிகளைப் பெறுவதற்காக முயற்சி செய்தவர்களுக்காகவும் வஸிய்யத் அமைப்பில் அங்கம் வகித்தவர்களுக்காகவும் துஆ செய்துள்ளார்கள். மேலும் வஸிய்யத்திற்காக அவர்கள் அறிவித்தார்கள். வஸிய்யத் செய்பவர் தனது வருமானம் மற்றும் சொத்தில் குறைந்தது பத்தில் ஒரு பகுதியை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பரப்புவதற்காகவும் ஜமாஅத்திற்காக தொண்டாற்றுபவர்களுக்காகவும் செலவு செய்ய வேண்டும். இந்த நிதியிலிருந்து அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ள வாழ்க்கையை நடத்தப் போதுமான வருமானமில்லாத புதிய முஸ்லிம்களுக்கும் பங்குண்டு. (உயில் : 34)

இந்த செல்வங்கள் வரும். ஏனென்றால் இது பூமி, வானம் ஆகியவற்றின் அரசனாக இருக்கின்ற அந்த வல்லமைமிக்க இறைவனின் வாக்குறுதியாகும்; விருப்பமாகும்.

இந்த வஸிய்யத் அமைப்பில் இணைகின்ற மக்களுக்காகவும் இதில் இணைந்து மார்க்கத்திற்கும், இறை படைப்பினங்களுக்கும் பொருளுதவி செய்பவர்களுக்காக துஆவும் செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வல்லமைமிக்க என் இறைவா! அதிகமாக மன்னிக்கின்ற மீண்டும் மீண்டும் கருணை காட்டுகின்ற இறைவா! உன்னால் அனுப்பப்பட்டுள்ள இந்தத் தூதர் மீது உண்மையான நம்பிக்கை வைத்து எவ்வித வஞ்சகமும் சுயநலமும் தப்பெண்ணமும் தங்களிடத்தில் இல்லாமல் நம்பிக்கை மற்றும் கட்டுப்படுதலின் உரிமையை முழுமையாக நிறைவேற்றுபவர்களாக இருப்பவர்களுக்காக துஆ செய்துள்ளார்கள். எனவே வஸிய்யத் அமைப்பில் சேர்ந்துள்ளவர்களின் ஈமான் கட்டுப்படுதல் மற்றும் தியாகத்தின் தரமும் எப்போதும் உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும். வஸிய்யத் செய்த பிறகு இறையச்சத்தின் முன்னேற முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். கிலாஃபத்தின் மீது விசுவாசத்துடன் உள்ளத் தொடர்பும் முன்பை விட அதிகமாக இருக்க வேண்டும். இறைவன் ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதில் முன்னேறிக் கொண்டே செல்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. கிலாஃபத் அமைப்பின் இறை வாக்குறுதிகளிலிருந்து பலன்பெற ஒவ்வொரு அஹ்மதிக்கும் நல்வாய்ப்பு கிடைக்கட்டுமாக. நாமும் இதிலிருந்து எப்போதும் பலன்பெறுபவர்களாக இருப்போமாக.

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 27.05.2011

Translated by : Maulvi S. ABDUL QADIR Sb.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456